සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Carnatic Music

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 7

கர்நாடக சங்கீதம்

சுட்டெண் :

நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. மங்கள வாத்தியங்களாகக் கருதப்படுபவை.
   1. தவில், வயலின்
   2. தவில், நாதஸ்வரம்
   3. புல்லாங்குழல், மிருதங்கம்
   4. வீணை, நாதஸ்வரம்

2. புராணம் பாடப்படும் இராகம்.
   1. ஆரபி
   2. மோகனம்
   3. கல்யாணி
   4. மத்தியமாவதி

3. அலங்காரம் பாடப்படும் இராகத்தின் மேள எண்.
   1. 15
   2. 29
   3. 65
   4. 22

4. இடை சுருக்குப்பறை என அழைக்கப்படும் இசைக்கருவி.
   1. பறை
   2. தவண்டை
   3. உடுக்கை
   4. தம்பட்டம்

5. ஜாதி பேதம் அடையும் அங்கம்.
   1. லகு
   2. த்ருதம்
   3. அனுத்ருதம்
   4. குரு

6. அநிபந்த வகைப் பாடல்களுள் அடங்குவது.
   1. திருப்புகழ்
   2. தேவாரம்
   3. பதம்
   4. வெண்பா

7. எட்டு அட்சரங்களைக் கொண்ட தாளம் எது?
   1. ரூபகம்
   2. ஆதி
   3. ஏகம்
   4. அட

8. கோலாடுவோம் எனும் நாட்டார் பாடல் அமைந்த இராகம்.
   1. ஸாவேரி
   2. ஆரபி
   3. ஹமீர்கல்யாணி
   4. பீம்பிளாஸ்

9. டண் டண் டண்ணக்கு எனும் ஓசையை எழுப்பும் இசைக் கருவி எது?
   1. தம்பட்டம்
   2. தவண்டை
   3. உடுக்கை
   4. சிலம்பு

10. ஒரு தட்டு எனும் செய்முறையைக் கொண்ட திரியாங்கத்தின் அங்கம்.
    1. லகு
    2. த்ருதம்
    3. அனுத்ருதம்
    4. காகபாதம்

(2x10=20 புள்ளிகள்)

Past Papers Wiki

02. பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புக.

(சேக்கிழார், நாதஸ்வரம், நிபந்தம் Ol_4, தவண்டை)

1. உடுக்கை வடிவிலான பெரிய தாளக் கருவி …….. ஆகும்.

2. ரூபக தாளத்தின் அங்கம் …… ஆகும்.

3. திருமண விழாவின் போது வாசிக்கப்படும் மங்களகரமான துளைக்கருவி …… ஆகும்.

4. பெரியபுராணத்தை அருளியவர் …… ஆவார்.

5. கீர்த்தனை, கீதம் என்பன …….. வகை உருப்படிகளுள் அடங்கும்.

(2x5=10 புள்ளிகள்)

03. இணைக்குக.

1. துடி	12ம் திருமுறை
2. சங்கராபரணம்	10
3. அலங்காரம்	ஸ்வரவரிசை
4. பெரியபுராணம்	உடுக்கை
5. புரந்தரதாஸர்	29

(2x5=10 புள்ளிகள்)

பகுதி – II

- **முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. 1. திரியாங்களையும் எடுக்கும் தாளம் யாது?
    2. திருப்புகழ் இயற்றியவர் யார்?
    3. ஆதி தாளத்தின் குறியீட்டைத் தருக?
    4. அப்பியாசகான உருப்படிக்கு உதாரணம் ஒன்று தருக?
    5. ஒரு தட்டும், வீச்சும் எனும் செய்முறையைக் கொண்ட அங்கம் எது?
    6. சமயச்சடங்குகளில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் இரண்டு தருக?

(2x6=12 புள்ளிகள்)

02. 1. நிபந்தம் என்றால் என்ன?
    2. நிபந்த உருப்படிகளுக்கு உதாரணம் 3 தருக?
    3. அநிபந்தம் என்றால் என்ன?
    4. அநிபந்த உருப்படிகளுக்கு உதாரணம் 3 தருக?

(3x4=12 புள்ளிகள்)

03. 1. திரியாங்கம் என்றால் என்ன?
    2. அவை எவை?
    3. அவற்றின் அங்கங்கள் அட்சரகாலம் செய்முறை என்பவற்றை அட்டவணைப்படுத்துக.

(3+3+6=12 புள்ளிகள்)

04. 1. ஆதி தாளத்தின் அங்கம் குறியீடு அட்சர எண்ணிக்கை செய்முறை என்பவற்றைத் தருக?
    2. ஏகதாளத்தின் குறியீடு அட்சர எண்ணிக்கை செய்முறை என்பவற்றைத் தருக?
    3. ரூபகதாளத்தின் குறியீடு, அட்சர எண்ணிக்கை செய்முறை என்பவற்றைத் தருக?

(3x4=12 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
    1. தவண்டை
    2. உடுக்கை
    3. தம்பட்டம்

(2x6=12 புள்ளிகள்)

06. சதுஸ்ரஜாதி ஏகதாள அலங்காரத்தின் இராகம் தாளம் இயற்றியவர் என்பவற்றுடன் ஸ்வரத்தாளக் குறியீட்டுடன் எழுதுக?

(12 புள்ளிகள்)

07. 1. நாட்டார் பாடல் என்றால் என்ன?
    2. நாட்டார் பாடலின் மறுபெயர் ஒன்று தருக?
    3. நாட்டார் பாடலில் தொழிற் பாடலின் வகைகள் எவை?
    4. பின்வரும் படல்களை வகைப்படுத்துக.
        1. மண்ணை நம்பி -
        2. ஏலேலோ ஐலசா ஏலேலோ -
        3. வானம் கருக்கவேணும் -
        4. கொழுந்து கொய்வொமே தேயிலை -
        5. தையும் பிறந்ததம்மா -

(3+1+3+5=12 புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாந் தவணைப் பரீட்சை –2025 **பாடம்** கர்நாடக சங்கீதம்

Music விடைப்பத்திரம் - 7

பகுதி – i

01. 1
02. 4
03. 1
04. 3
05. 1
06. 4
07. 2
08. 4
09. 1
10. 3

02. 1. தவண்டை
2. Ol_4
3. நாதஸ்வரம்
4. சேக்கிழார்
5. நிபந்தம்

03. 1. 4
2. 5
3. 2
4. 1
5. 3

பகுதி – ii

01. 1. ஜம்பைதாளம்
2. அருணகிரிநாதர்
3. l_4OO
4. ஸ்வரவரிசை
5. த்ருதம்
6. தவண்டை, உடுக்கை

02. 1. தாளக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கும் பாடல்கள் நிபந்தம் எனப்படும்.
2. கீதம், கீர்த்தனை, வர்ணம்
3. தாளக்கட்டுப்பாட்டுக்குள் அடங்காத பாடல்கள். அநிபந்தம் எனப்படும்.
4. வெண்பா, ஸ்லோகம், விருத்தம்

03. 1 தாளத்தில் முதல் மூன்று அங்கங்களும் திரியாங்கம் எனப்படும்.
2. லகு, த்ருதம், அனுத்ருதம்
3. அட்டவணை போட்டிருப்பின் புள்ளி வழங்குக.

04. ஆதி தாளம்

குறியீடு	-	l_4OO
அங்கம்	-	லகு, த்ருதம், அனுத்ருதம்
செய்முறை	-	ஒரு தட்டும் 3 விரலெண்ணிக்கைகளும் ஒரு தட்டும் வீச்சும் பின் ஒரு தட்டும் வீச்சும் ஆகும்.
அட்சர எண்ணிக்கை	-	8

ஏக தாளம்

குறியீடு	-	l_4
அங்கம்	-	லகு
செய்முறை	-	ஒரு தட்டும் 3 விரலெண்ணிக்கைகளும்.
அட்சர எண்ணிக்கை	-	4

ரூபக தாளம்

குறியீடு	-	Ol_4
அங்கம்	-	லகு, திருதம்
செய்முறை	-	ஒரு தட்டும் 3 விரலெண்ணிக்கைகளும்.
அட்சர எண்ணிக்கை	-	6

අ.පො.ස සාමාන්‍ය පෙළ/විද්‍යුත් පත්‍ර/සටහන් සඳහා Past Papers Wiki සමඟ සම්බන්ධ වන්න

05. தவண்டை

மரத்தாலும் தோலாலும் செய்யப்பட்ட உடுக்கை ரூபத்தில் உள்ள பெரிய தாளக் கருவியே தவண்டையாகும். வழக்கமாக மாரியம்மன் கோயிலில் இவ் இசைக்கருவி வாசிக்கப்படுவதைக் கேட்கலாம். தவண்டை குச்சியால் அடித்து வாசிக்கப்படும்.

தம்பட்டம்.

இது ஒரு இசைக்கருவியாகும். இதன் ஒரு பக்கம் தோலால் மூடப்பட்டிருக்கும் டண் டண் டண் ணணக்கு என்று கேட்கும் படியாக கிராம தேவைகளின் திருவிழாக்களில் ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள் தம்பட்டங்களை இரு குச்சிகளினால் வாசிப்பதைக் காணலாம்.

உடுக்கை

கிராமப் புறக் கோயில்களில் பெரும்பாலும் வாசிக்கப்படும் ஒரு தோல் வாத்தியமாகும். உலோகத்தால் செய்யப்பட்ட இரு பக்கங்களும் விரிந்து இடை சிறுத்துப் பருத்திருப்பதால் இதை இடைசுருக்குப்பறை என்றும் துடி என்றும் அழைப்பர். கரகம் ஆடும் போதும் உறுவேற்றும் போதும் இவ் வாத்தியம் வாசிக்கப்படும்.

06. ஏக தாள அலங்காரத்தினை எழுதியிருப்பின் புள்ளி வழங்கவும்.

07. 1. கிராமப் புற மக்களால் வாய் வழியாக பாடப்பட்டு வந்த பாடல்கள் நாட்டார் பாடல் எனப்படும்.
2. கிராமியப்பாடல், பாமரஜனகானம்
3. மீனவப்பாடல்
   விவசாயப்பாடல்
   கொழுந்துப்பாடல்
   அரிவுவெட்டுப்பாடல்
4. அரிவுவெட்டுப்பாடல்
   மீனவப்பாடல்
   விவசாயப்பாடல்
   கொழுந்துப்பாடல்
   விவசாயப்பாடல்

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank